# தேசிய குறைந்தபட்ச சம்பளம் அதிகரித்தல் பற்றிய அறிவிப்பு

# ஊழியர்கள் மற்றும் தொழில் தருநர்கள் அறிய

**(2016 இல.3 தேசிய குறைந்தபட்ச சம்பளச் சட்டத்தில் உள்ளடக்கப்படும் ஊழியர்களுக்காக)**

2025 ஏப்ரல் 01 முதல் தேசிய குறைந்தபட்ச மாதாந்த வேதனம் ரூ. 27,000/- வரையும் தேசிய குறைந்த பட்ச அன்றாட வேதனம் ரூ. 1,080/- வரையும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

2025 மார்ச் 31ம் திகதிக்கு வரவு-செலவுத்திட்ட சலுகைக் கொடுப்பனவுகள் சட்டத்தின் கீழ் உரித்துரிமை பெற்ற கொடுப்பனவுகள் கீழ்க்காணும் வேதனத்தின் பகுதியாக கீழேயுள்ள உதாரணத்தின் பிரகாரம் ஒன்றிணைக்கப்படல் வேண்டும்.

**உதாரணம் 01**

| | மாதாந்தம் (ரூ.) | அன்றாடம் (ரூ.) |
|---|---|---|
| 2025.03.31ம் திகதிக்கு காணப்பட்ட சம்பளம் | 17,500/- | 700/- |
| வரவு-செலவுத் திட்ட சலுகைக் கொடுப்பனவு (2005 இல. 36 மற்றும் 2016 இல. 04 சட்டங்கள்) | 3500/- | 140/- |
| 2025.04.01 முதல் குறைந்தபட்ச அடிப்படைச் சம்பளம் | 27,000/- | 1,080/- |

**உதாரணம் 02**

| | மாதாந்தம் (ரூ.) | அன்றாடம் (ரூ.) |
|---|---|---|
| 2025.03.31ம் திகதிக்கு காணப்பட்ட சம்பளம் | 26,000/- | 1040/- |
| வரவு-செலவுத் திட்ட சலுகைக் கொடுப்பனவு (2016 இல. 04 சட்டம்) | 2,500/- | 100/- |
| 2025.04.01 முதல் குறைந்தபட்ச அடிப்படைச் சம்பளம் | 28,500/- | 1,140/- |

**உதாரணம் 03**

| | மாதாந்தம் (ரூ.) | அன்றாடம் (ரூ.) |
|---|---|---|
| 2025.03.31ம் திகதிக்கு காணப்பட்ட சம்பளம் | 40,000/- | 1,600/- |
| வரவு-செலவுத் திட்ட சலுகைக் கொடுப்பனவு (2016 இல. 04 சட்டம்) | 2,500/- | 100/- |
| 2025.04.01 முதல் குறைந்தபட்ச அடிப்படைச் சம்பளம் | 42,500/- | 1,700/- |

**கவனிக்கவும்**:-

இவ்வேதனம் ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதி, மேலதிக நேரகொடுப்பனவு, பணிக்கொடை, மகப்பேற்றுக் கொடுப்பனவு, விடுமுறை தின கொடுப்பனவு போன்ற சகல நியதிகள் கொடுப்பனவுகளுக்கும் பொருத்தமாகக் கொள்ளல் வேண்டும்.

2026 ஜனவரி 01 முதல் தேசிய குறைந்தபட்ச மாதாந்த வேதனம் ரூ. 30,000.00 வரையும் தேசிய குறைந்தபட்ச அன்றாட வேதனம் ரூ. 1,200 வரையும் அதிகரிக்கப்படல் வேண்டும்.

**எச். எம். டி. என். கே. வட்டலியத்த,**
**தொழில் ஆணையாளர் நாயகம்,**
**தொழில் திணைக்களம்,**
**'மெஹெவர பியச', கொழும்பு -0**5.

2025.07.25